## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – பணியமைப்பு – காஞ்சிரம் மாவட்டம் மற்றும் புதியதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி, தென்காசி, ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்துர் மாவட்டங்களில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள் தோற்றுவிப்பது – பணியிடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.1)த் துறை

அரசாணை (நிலை) எண் 4

நாள்: 14 .07.2021
பிலவ. ஆனி – 30.
திருவள்ளுவர் ஆண்டு. 2052

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 424, 426, 428, 430 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 12.11.2019 மற்றும் 438, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 15.11.2019.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண் 12239/நிர்.1/2019, நாள் 20.12.2019 மற்றும் 30.12.2019.

-----

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் விழுப்புரம், திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களை பிரித்து கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்துர் ஆகிய புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களின் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு உள்ளதாக மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்:–

| வ. எண் | புதிதாக உத்தேசிகக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் | புதிதாக உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி | 32944 |
| 2. | தென்காசி | 27449 |
| 3. | செங்கல்பட்டு | 31480 |
| 4. | ராணிப்பேட்டை | 31182 |
| 5. | திருப்பத்துர் | 21771 |
| மொத்தம் | | 122800 |

(த.பி.பா.)

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் அனைத்தும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்ததின் மூலமாக மாற்றுத்திறனாளி நபர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இத்திட்டங்களுக்கான சரியான மாற்றுத்திறனாளிகளைக் கண்டறிந்து நலத்திட்ட உதவிகளை வழங்க ஏதுவாக புதியதாக உருவாகக்கப்பட்ட மாவட்டங்களான கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்துர் மாவட்டங்களுக்கு புதிதாக மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்றும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 17 அலுலவக பணியாளர் பணியிடங்களை தோற்றுவிக்குமாறும் அரசை கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்துர் ஆகிய மாவட்டங்களுக்கு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகங்களுக்கு தோற்றுவிக்கப்படும் பணியிடங்களுக்கான செலவினங்களை கீழ்க்கண்டவாறு வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

**தொடர் செலவினம் – ரூ.6,16,97,680/–**

**தொடராச் செலவினம் – ரூ.1,91,75,000/–**

3. மேற்காணும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்கலாம் என முடிவு செய்துள்ளது. மேலும் முன்னாளைய காஞ்சீபுரம் மாவட்டத்திற்கான மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் செங்கல்பட்டில் ஏற்கனவே செயல்பட்டுவரும் நிலையில், அந்த அலுவலகத்தை புதிதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டத்திற்கான அலுவலகமாக தொடர்ந்து இயங்கலாம் என்றும், காஞ்சிபுரம் மற்றும் ஏனைய புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி, தென்காசி, ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்துர் ஆகிய 5 மாவட்டங்களுக்கு புதியதாக மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகங்களை கீழ்க்கண்ட பணியிடங்களுடன் தோற்றுவித்தும் அரசு ஆணையிடுகிறது:-

(1) மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்
(2) இளநிலை மறுவாழ்வு அலுவலர்
(3) முடநீக்கு தொழில்நுட்ப பணியாளர்
(4) பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர்
(5) செயல்திறன் உதவியாளர்
(6) இளநிலை உதவியாளர்
(7) தட்டச்சர்
(8) உதவி வரவேற்பாளர்
(9) அலுவலக உதவியாளர்
(10) இரவுக் காவலர்

மேற்கண்ட பணியாளர்களுக்கான ஒப்பளிக்கப்பட்ட தொடர் செலவினத்தை இணைப்பு–1ல் காணலாம். உள்கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கான ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொடர் செலவினத்தை இணைப்பு–2ல் காணலாம். தொடர் செலவினமாக ரூ.3,24,11,000/–க்கும் தொடராச் செலவினமாக (இணைப்பு–3) ரூ.1,33,50,000/–க்கும் ஆகமொத்தம் ரூ.4,57,61,000/– (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்தேழு இலட்சத்து அறுபத்தோராயிரம் மட்டும்)–க்கு அரசு ஒப்புதல் அளிக்கிறது.

4. மேலே பத்தி-3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணிக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| வ. எண். | விரிவானகணக்குத்தலைப்பு<br>கோரிக்கைஎண்.52 – 02<br>2235 – சமூகப்பாதுகாப்பும் நலனும் – 02 சமூகநலன் – 101 மாற்றுத்திறனாளிகள் நலன்– மாநிலச்செலவினங்கள் – BD மண்டல மறுவாழ்வு மையங்கள் | நடப்பாண்டு 2021–2022ல் 8 மாதங்களுக்கான செலவினங்களுக்கு அனுமதிக்கப்படும் (தொகை ரூ.) |
|---|---|---|
| 1 | 301 –சம்பளங்கள் 01 – அடிப்படை சம்பளம்<br>(IFHRMS DPC 2235 02 101 BD 30101) | 1,50,00,000/– |
| 2 | 301 –சம்பளங்கள் 02 – மருத்துவப் படி<br>(IFHRMS DPC 2235 02 101 BD 30102) | 1,20,000/– |
| 3 | 301 –சம்பளங்கள் 03 – மருத்துவச் செலவுகள்<br>(IFHRMS DPC 2235 02 101 BD 30103) | 5,000/– |
| 4 | 301 –சம்பளங்கள் 04 – ஏனைய படிகள்<br>(IFHRMS DPC 2235 02 101 BD 30104) | 4,00,000/– |
| 5 | 301 –சம்பளங்கள் 06 – வீட்டு வாடகைப் படி<br>(IFHRMS DPC 2235 02 101 BD 30106) | 14,07,000/– |
| 6 | 301 –சம்பளங்கள் 07 – பயணச் சலுகை<br>(IFHRMS DPC 2235 02 101 BD 30107) | 10,000/– |
| 7 | 303 – அகவிலைப் படி 01 – அகவிலைப்படி<br>(IFHRMS DPC 2235 02 101 BD 30301) | 26,00,000/– |
| 8 | 305 – அலுவலகச் செலவுகள்01 – தொலைபேசிக் கட்டணங்கள்<br>(IFHRMS DPC:2235 02 101 BD 30501) | 80,000/– |
| 9 | 305 – அலுவலகச் செலவுகள்02 – ஏனைய சில்லறைச் செலவுகள்<br>(IFHRMS DPC:2235 02 101 BD 30502) | 74,000/– |
| 10 | 305 – அலுவலகச் செலவுகள்03 – மின் கட்டணங்கள்<br>(IFHRMS DPC:2235 02 101 BD 30503) | 1,60,000/– |
| 11 | 305 – அலுவலகச் செலவுகள்05 – அறைகலன்<br>(IFHRMS DPC:2235 02 101 BD 30505) | 7,50,000/– |
| 12 | 306 – வாடகை, கட்டண வீதங்கள், வரிகள்01 – வாடகை<br>(IFHRMS DPC:2235 02 101 BD 30601) | 4,00,000/– |
| 13 | 319 – இயந்திரமும் சாதனமும்03 – பராமரிப்பு<br>(IFHRMS DPC:2235 02 101 BD 31903) | 40,000/– |
| 14 | 321 – மோட்டார் வண்டிகள்01 – வாங்குதல்<br>(IFHRMS DPC:2235 02 101 BD 32101) | 40,50,000/– |
| 15 | 345 – பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் 01– பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்<br>(IFHRMS DPC:2235 02 101 BD 34501) | 3,48,000/– |
| 16 | 376 – கணினியும் துணைப் பாகங்களும்01 – வாங்குதல்<br>(IFHRMS DPC:2235 02 101 BD 37601) | 10,50,000/– |

| | | |
|---|---|---|
| 17 | 376 – கணினியும் துணைப் பாகங்களும் 03 – எழுதுபொருள் (IFHRMS DPC:2235 02 101 BD 37603) | 1,00,000/- |
| 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் 02 – சமூக நலன் 101 – மாற்றுத்திறனாளிகள் நலன்– மாநிலச்செலவினங்கள் MV – மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் | | |
| 18 | 321 – மோட்டார் வண்டிகள் 01 – வாங்குதல் (IFHRMS DPC:2235 02 101 MV 32101) | 75,00,000/- |
| 19 | 333 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 04 – ஒப்பந்த ஊதியம் (IFHRMS DPC:2235 02 101 MV 33304) | 6,00,000/- |
| 20 | 345 – பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் 01– பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் (IFHRMS DPC:2235 02 101 MV 34501) | 2,64,000/- |
| | மொத்தம் | 3,49,58,000/- |

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு, பொது–1) துறையால் தனியாக பிறப்பிக்கப்படும் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வரவு–செலவு, பொது–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021–2022ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக தவறாது, உரிய நேரத்தில், நிதித் (சந/வ.செ.பொ–I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் கோப்பு எண் 25025/(ச.ந.), நாள் 10.07.2021 அலுவல்சாரா எண் 28815/மைமஆபி/2021, நாள் 14.07.2021–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. மேலும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 201 (இரு நூற்று ஒன்று) ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். லால்வேனா
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை–5.
சம்மந்தப்பட்ட மாவட்டங்கள்.
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர் சென்னை–18.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.

மனிதவள மேலாண்மை துறை, சென்னை–9.
நிதி (ச.ந./வழிவகைகள்–I/வ.செ.பொ–I/II/மைமஆபி)த் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
16/07/2021
16/7/21

## இணைப்பு –1

**அரசாணை (நிலை) எண். 4, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 14.07.2021**

**மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக பணியிடங்கள்**

| வ. எண் | புதிதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் விவரம் | பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் | சாராசரி ஊதியம் | ஆண்டு செலவினம் | ஐந்து மாவட்டங்களுக்கான செலவினத் தொகை விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் | 1 | 37700–138500 | 78600 | 943200 | 4716000 |
| 2. | இளநிலை மறுவாழ்வு அலுவலர் | 1 | 35600–130800 | 74200 | 890400 | 4452000 |
| 3. | முடநீக்கு தொழில்நுட்ப பணியாளர் | 1 | 35400–130400 | 73900 | 886800 | 4434000 |
| 4. | பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர் | 1 | 19500–71900 | 40750 | 489000 | 2445000 |
| 5. | செயல்திறன் உதவியாளர் | 1 | 19500–71900 | 40750 | 489000 | 2445000 |
| 6. | இளநிலை உதவியாளர் | 1 | 19500–71900 | 40750 | 489000 | 2445000 |
| 7. | தட்டச்சர் | 1 | 19500–71900 | 40750 | 489000 | 2445000 |
| 8. | உதவி வரவேற்பாளர் | 1 | 15900–58500 | 33150 | 397800 | 1989000 |
| 9. | அலுவலக உதவியாளர் | 1 | 15700–58100 | 32850 | 394200 | 1971000 |
| 10. | இரவுக் காவலர் | 1 | 15700–58100 | 32850 | 394200 | 1971000 |
| மொத்தம் | | 10 | | | 5862600 | 29313000 |

ஆர். லால்வேனா
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்
16/7/2021

16/7/21

## இணைப்பு-2

அரசாணை (நிலை) எண் 4, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 14.07.2021

உள்கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு ஆகும் தொடர் செலவினம்

| வ. எண் | செலவின விவரம் | ஓர் அலுவலகத்திற்கு மாதம் ஒன்றுக்கு ஆகும் செலவினம் | ஆண்டு செலவினம் | ஐந்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலக செலவினம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | தொலைபேசி கட்டணம் | 2000 | 24000 | 1,20,000/- |
| 2. | சில்லரை செலவினம் | 1000 | 12000 | 60,000/- |
| 3. | மின் கட்டணம் | 4000 | 48000 | 2,40,000/- |
| 4. | அலுவலக வாடகை | 10000 | 120000 | 6,00,000/- |
| 5. | பராமரிப்பு செலவினம் | 1000 | 12000 | 60,000/- |
| 6. | எரிபொருள் செலவினம் | 8700 | 104400 | 5,22,000/- |
| 7. | எழுதுபொருள் செலவினம் | 0 | 30000 | 1,50,000/- |
| 8. | இதர செலவினம் | 0 | 10000 | 50,000/- |
| 9. | Mobile Van ஓட்டுநர் | 10000 | 120000 | 6,00,000/- |
| 10. | Mobile Van உதவியாளர் | 5000 | 60000 | 3,00,000/- |
| 11. | Mobile Van எரிபொருள் செலவினம் | 6600 | 79200 | 3,96,000/- |
| | | மொத்தம் (2) | | 30,98,000/- |

ஆர். லால்வேனா
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்

16/7/21

14/07/2021

## இணைப்பு-3

அரசாணை (நிலை) எண் 4, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 14.07.2021

### தொடராச் செலவினங்களின் விவரம்

| வ. எண் | தொடராச் செலவின விவரம் | எண்ணிக்கை | மொத்த விலை | ஐந்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலக செலவினம் |
|---|---|---|---|---|
| 1. | Mobile Van | 5 | 15,00,000 | 75,00,000/- |
| 2. | Diesel Vehicle (Jeep) | 5 | 8,00,000 | 40,00,000/- |
| 3. | Computer (Each-3) | 15 | 50,000 | 7,50,000/- |
| 4. | Furniture | 5 | 1,50,000 | 7,50,000/- |
| 5. | Printer (Each-3) | 15 | 20,000 | 3,00,000/- |
| 6. | Bicycle | 5 | 10,000 | 50,000/- |
| மொத்தம் | | | | 1,33,50,000/- |

ஆர். லால்வேனா
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்
16/7/21 16/07/2021